**மாத்தறை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்கள் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 மாத்தறை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 மாத்தறை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 22 குழுக்களுக்கு முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்படுவதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தில் அடங்கியுள்ள கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 22 கமநல சேவைக் குழுக்களினால் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் படி நிதிக்கூற்றுக்களில் அடங்க வேண்டிய ஆக்கக்கூறுகளில் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை மாவட்டத்தின் 21 கமநல சேவைக் குழுக்களுக்குச் சொந்தமான கூட்டுத்தொகை 348.8 ஹெக்டயர்களை கொண்ட காணி 09 துண்டுகள் 35,551 சதுர அடிகளைக் கொண்ட 11 அலுவலக கட்டிடங்கள் சதுர | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குழுக்களுக்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் அனைத்தும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவு குறிப்பிடப்பட்டிருக்காத 09 அலுவலக் கட்டிடங்கள் 1559 சதுர அடி அளவான 02 உரக் களஞ்சியங்கள் சதுர அடி அளவு குறிப்பிடப்பட்டிருக்காத 09 உரக் களஞ்சியங்கள் 69 சதுர அடிகளைக் கொண்ட நாட்டுமேடை குடில் ஒன்று சதுர அடி அளவு குறிப்பிடப்படாத 03 நாட்டு மேடை குடில்கள் 630 சதுர அடி அளவான வீடொன்று அலுவலகங்கள் அமைந்துள்ள காணித்துண்டுகள் ஆகிய நிலையான சொத்துக்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஹக்மன கமநல சேவைக் குழுவினால் கணக்கீட்டு கணினி மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 248,205 தொகை கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு செலுத்தி அந்தப் பெறுமதியை நிலையான சொத்துக்ளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் அந்த மென்பொருள் கமநல சேவைக் குழுவிற்கு கிடைத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குழுக்களுக்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் அனைத்தும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மெதவியன்கொட கமநல சேவைக் குழுவினால் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு செலுத்த வேண்டியிருந்த மானிய உர விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 4,875,064 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மிகை அந்தப் பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| (ஈ) | அகுரெஸ்ஸ கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வியாபாரக் கணக்கு தயாரிக்கும் போது ரூபா 330,500 தொகைக்கான கொள்வனவு போக்குவரத்துச் செலவு எனவும் | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 339,500 தொகை விற்பனவு ஆரம்ப இருப்பு எனவும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | வெலிகம கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 122,328 தொகைக்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்கீடு செய்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மீளாய்வாண்டிற்கான வருமானத்தை இனங்கண்டு அந்த ஆண்டிலேயே கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | ரன்ஸேகொட கமநல சேவைக் குழுவின் ரூபா 752,070 தொகைக்கான நிலையான சொத்து அல்லாத விடயங்கள் நிலையான சொத்து என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையிடம் காணப்படாத ரூபா 171,558 தொகைக்கான 08 சொத்து விடயங்கள் நிலையான சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க சொத்துக்களின் தன்மையின் படி வகைப்படுத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், ஏடுகளில் காணப்படும் ஆனால் பௌதீக ரீதியாக காணப்படாத சொத்துகள் தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொண்டு பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மடிஹகொடகம கமநல சேவை குழுவின் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வங்கி நடைமுறைக் கணக்கு ரூபா 503,833 தொகைக்கான மீதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்காததுடன், 2020 ஜூலை 31 திகதியின் பின்னர் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குழுக்களுக்கு சொந்தமான வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், மாதாந்தம் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படாமை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை மாவட்டத்தில் 05 கமநல சேவைக் குழுக்களின் 10 கணக்கு விடயங்கள் நிதிக்கூற்றுக்களின் படி காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளின் பெறுமதி நேரொத்த அறிக்கையின் படி காட்டப்பட்டுள்ள பெறுமதியிடையே ரூபா 812,611 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கு மீதிகள் மற்றும் நேரொத்த அறிக்கைகள் இடையே இணக்கமின்மைக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |

### 1.3.4 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 113,195 தொகைக்கான 02 தொங்கல் கணக்கு வரவு மீதிகளும் வேறு 02 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 51,332 தொகைக்கான தொங்கல் கணக்கு செலவு மீதி 10 வருடங்களுக்கும் 13 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக கணக்குகளில் பேணிச் செல்லப்பட்டு காணப்பட்டது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தொங்கல் கணக்குகளை தீர்த்து நிதிக்கூற்றுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 22 கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 44,731,840 இற்கான 147 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அந்த மீதிகளை கணக்காய்வின் போது திருத்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாமல் இருந்தது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| (i) | பிரிவு 30 (1)(2)(3)(4) மற்றும் (5) | குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய அனைத்து வயற் காணிகளையும் நெற்பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன், நெல் பயிர்ச் செய்கை செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது பல் வருடங்கள் அல்லாத | இணங்குகின்றேன். தரிசு வயல்களை சரியாக இனங்கண்டு பகுப்பாய்வு அறிக்கையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயிர்கள் அல்லது அரை ஆண்டுப் பயிர்கள் அல்லது நீண்ட காலப் பயிர்கள் பயிர்ச் செய்யக்கூடியதாக இருந்த போதிலும், 21 கமநல அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 10,207 ஏக்கர் வயற் காணிகளை பயிர் செய்கைக்காக வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | | |
| (ii) | பிரிவு 56 (3)(4) | ஏக்கர் வரி செலுத்துவதை புறக்கணிக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக எழுத்துமூலம் குத்தகையாளருக்கு அறிவித்தல் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட வேண்டியதுடன், தொடர்ந்தும் கொடுப்பனவை புறக்கணிப்பின் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து அதன்மூலம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். 15 குழுக்களினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தொடர்ந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ஏக்கர் வரி ரூபா 2,659,885 இற்கான தொகை புறக்கணித்தல் தொடர்பான மேற்குறிப்பிட்ட பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தலல்ல, மிரிஸ்ஸ மற்றும் கிரிந்த ஆகிய குழுக்களில் நிலுவை ஏக்கர் வரி அறவிடப்பட்டுள்ளது. ஏனைய குழுக்களில் நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நி.பி. 142(2) | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க செயற்படாமையினால் 2022 / 2023 பெரும் போகத்தில் நெற்பயிர்ச் செய்கைக்காக சலுகைத் தொகைக்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக 08 கமநல சேவை நிலையங்களுக்கு | இணங்குகின்றேன். கமநல சேவை ஆணையாளரினால் வேண்டப்படாமையினால் அனுப்பப்படவில்லை. அந்தத் தொகையை கூடிய விரைவில் அனுப்புவதற்கு அல்லது முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சேகரிக்கப்பட்ட பணம் விரைவாக ஏற்றுக்கொள்ளும் உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட வேண்டியதுடன், பணத்தை விளைவற்று வைத்திருக்கல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கியிருந்த உர விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 6,737,897 தொகை கமநல சேவை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் 2024 ஏப்ரல் மாதம் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை குழுவின் நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | | கூடாது. |
| (ii) | நி.பி. 757 (2)(அ) மற்றும் (ஆ) மற்றும் (4) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் கணக்காய்விற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 880, உள்ளக உள்நாட்டு விவகார மற்றும் மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 2019 மார்ச் 23 திகதிய 07/2019 இலக்கம் கொண்ட மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2020 ஜூன் 25 திகதிய 08/2020 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | குறிப்பிட்ட நிதிப் பிரமாணத்திற்கு இணங்க 22 குழுக்களில் பிணை வைக்க வேண்டிய 445 உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023 ஜனவரி 23 திகதிய 7/2/15/3/3(VII) இலக்கம் கொண்ட கடித்தின் மூலம் விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளமையால் அதன்படி செயற்படுவதுடன், ஏனைய உத்தியோகத்தர்களின் பிணை எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை இணங்க செயற்பட வேண்டும். |
| **(இ)** | **கமநல அபிவிருத்தி ஆணையாளர் சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | 2016 செப்தம்பர் 08 திகதிய 07/2016 இலக்கம் கொண்ட சுற்றிக்கை | அனைத்து கமநல சேவை நிலையங்களுக்கு ஒட்டிய விற்பனை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும், 04 கமநல வேவைக் குழுக்களினால் அதற்கிணங்க விவசாய விற்பனை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டு குழுவின் வருமானத்தை அதிகரிப்பதற்காக மற்றும் விவசாயிகளுக்கு விற்பனை சேவையொன்றை வழங்குவது தொடர்பாக | அந்த நிலையங்களின் விற்பனை நிலையங்கள் தனியாக காணப்படாத போதிலும் விவசாயப் பொருட்களின் விற்பனை அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றதென கருணையுடன் அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ii) | 2014 ஆகஸ்ட் 22 திகதிய 07/2014 (107 திருத்தம் iii) இலக்கம் கொண்ட சுற்றிக்கை | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க கமநல சேவைக் குழுவொன்றினால் நாளாந்த கையில் தடுத்து வைக்கக்கூடிய தொகையின் வரையறை ரூபா 10,000 தொகையாக காணப்பட்ட போதிலும், 03 குழுக்களினால் மீளாய்வாண்டின் போது 33 நாட்களுக்கும் 51 நாட்களுக்கும் இடைப்பட்ட நாட்களில் நாளாந்த காசு மீதி ரூபா 10,471 இற்கும் ரூபா 228,227 தொகைக்கும் இடைப்பட்ட தொகையொன்று கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். செய்முறை வசதியீனங்கள் காரணமாக வங்கிக்கு செல்ல முடியாத நிலைமையொன்று காணப்பட்டமையால் பணம் வைப்புச் செய்தல் தாமதமடைந்தது. எதிர் காலத்தில் அவ்வாறு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் 16 குழுக்களின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 10,100,340 இற்கான மிகையொன்றும் 06 குழுக்களின் ரூபா 851,542 இற்கான பற்றாக்குறை ஒன்றும் காணப்பட்டது. அதன்படி, 22 குழுக்களின் ஒட்டுமொத்த நிதி விளைவுகள் ரூபா 9,248,798 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் 22 குழுக்கள் தொடர்பான ஒட்டுமொத்த நிதி விளைவுகள் ரூபா 3,396,479 இற்கான மிகையொன்று காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கமநல சேவைக் குழுக்களினால் மிகையாக காணப்பட்ட பணம் ஆக்கபூர்வமான முதலீடு செய்து கூடிய விளைவொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் கூட்டுப்பெறுமதி ரூபா 5,942,134 தொகை நடைமுறைக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் முதலிடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | நிதி விளைவற்று வைத்திருக்காமல் முறையான அங்கீகாரத்தின் கீழ் விளைவுகளை பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்த வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கமநல சேவைகு குழுக்களினால் விற்பனை செய்வதற்காக கொள்வதனவு செய்யப்பட்டிருந்த ரூபா 187,260 தொகை பெறுமதியான மரக்கறி விதைகள், கிருமி நாசினிகள், கன்றுகள் மற்றும் உர இருப்பினை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்கு போதியளவு முயற்சியொன்று மேற்கொள்ளாமையினால் அவை காலவதியாகி இருந்ததுடன், அதன் காரணமாக குழுக்களுக்கு மேற்கூறிய பெறுமதியினால் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | குழுக்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டங்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்ய வேண்டும். |

### 3.3 தென்படக்கூடிய நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கெகனதுர கமநல சேவைக் குழுவில் 2024 ஏப்ரல் 25 திகதி களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பு பரிசோதனை செய்யப்பட்டதுடன், அத் தினத்தில் இருப்புப் பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகள் மற்றும் பௌதீக ரீதியான மீதிகளை இணக்கஞ் செய்த போது கூட்டுத்தொகை ரூபா 70,105 தொகை பெறுமதியான 1,437.5 கிலே கிராம் பெறுமதியான ERP: உரம் மற்றும் 301 கிலோ கிராம் யூரியா உரம் (மானியம்) இற்கான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | இருப்புப் பற்றாக்குறைக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 21 குழுக்களின் 93 அங்கத்தவர்கள் தொடர்ச்சியாக மூன்று குழுக் கூட்ட தவணைகளை மிகைத்து பங்குப்பற்றாமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 51(6)(ஈ) (i) மற்றும் | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் அங்கத்தவர்கள் மீண்டும் நியமனம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (ii) இணங்க அவர்களின் நியமனத்தை முடிவுறுத்தி அதற்காக வேறு நபர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/5/12/11 இலக்கம் கொண்ட 2022 ஜூன் 01 திகதிய கடிதத்தின் படி செயற்படாமையால் மாத்தறை மாவட்டத்தின் 19 கமநல சேவைக் குழுக்கள் 2 வருடங்களுக்கும் 30 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் தீர்த்திருக்காமல் கூட்டுத்தொகை ரூபா 10,954,302 தொகைக்கான 184 பெற வேண்டிய மீதிகள் மற்றும் 2 வருடங்களுக்கும் 33 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் தீர்க்கடாமல் காணப்பட்டு வருகின்ற கூட்டுத்தொகை ரூபா 11,901,592 தொகைக்கான செலுத்த வேண்டிய 140 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | நீண்ட காலம் முதல் காணப்படுகின்ற அறவிடப்படுகின்ற மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தரினால் தமது கடமைகள் தொடர்பாக மாதாந்த எதிர் கால நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் சமர்ப்பிக்கபட வேண்டியிருந்த போதிலும் 02 கமநல அபிவிருத்திக் குழுக்களில் கடமையாற்றும் 13 உத்தியோகத்தர்களினால் எதிர் கால நிகழ்ச்சித் திட்டங்களும் 17 உத்தியோகத்தர்களின் நிறை வேற்றப்பட்ட வேலை திட்டங்களும் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | மாதாந்த எதிர் கால நிகழ்ச்சித் திட்டம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் சமர்ப்பிக்கப்படாத உத்தியோகத்தர் தொடர்பாக பொறுத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரன்ஸேகொட கமநல சேவைக் குழுவினால் விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் மீளாய்வாண்டு ஒக்தோபரில் ரூபா 403,300 தொகை மற்றும் திசெம்பரில் | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் விவசாயப் பொருட்கள் வழங்கும் போது |

| | | |
|---|---|---|
| ரூபா 272,500 தொகை பெறுமதியான கருவா உரம் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு எதுவித சட்ட உடன்படிக்கைகளும் இன்றி வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 562,300 தொகை 2024 ஏப்ரல் 02 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | | விற்பனை பெறுமதியை அறவீடு செய்வதற்கான நிபந்தனைகளுடன் உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அறவீடு செய்யப்பட வேண்டிய கால தாமதத்தை குறைக்கக்கூடிய விதமாக முறையான செய்முறையொன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

**3.6 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலிகம கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான 02 நாட்டு மேடைக் குடில்கள் மற்றும் நூதனசாலையொன்று செயற்பாட்டு அலுவல்களுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கமநல வங்கிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 22 கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான 22 கமநல வங்கிகளினால் விவசாயிகளுக்கு வழங்கியிருந்த செயற்திட்டக் கடன் மற்றும் விவசாயக் கடன்தொகைகளில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 1,567 விவசாயிகளிடமிருந்த அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 37,790,966 இற்கான கடன்மீதி கால தாமதம் அடைந்திருந்தது. இந்தக் கடனை அறவீடு செய்யும் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | இணங்குகின்றேன். எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | வங்கிக் கடன் குறிப்பிட்ட காலப் பகுதியில் அறவிடப்பட வேண்டியதுடன், செயற்திட்டக் கடன்களை நலன்கள் பெறக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். |